| | தேவையான நில மேம்பாட்டு ஆதாரங்களை உறுதி செய்வதற்காக உருவாக்கப் பட்டுள்ளது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ. 2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend subsidy) இருக்கும்.<br>• நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.<br>• நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் சான்று பெற்றிருக்க வேண்டும். | • விண்ணப்பதாரர் விவசாயத்தை தொழிலாக கொண்டவராக இருக்க வேண்டும்.<br>• குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | |
| 15.3 | **<u>தொழில் முனைவோர் திட்டம்</u>**<br><br>**<u>பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல்</u>**<br><br>ஆதிதிராவிடர்கள் பெட்ரோல், கேஸ் சில்லரை விற்பனை | • சிறப்புத் திட்டமான பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• சிறப்புத் திட்டமான | |

| | | | |
|---|---|---|---|
| | நிலையம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend subsidy) இருக்கும்.<br>குறைந்தபட்ச திட்டத்தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். | பெட்ரோல்/டீசல்/ எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் எண்ணெய் நிறுவனம் மூலம் தெரிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.<br>• தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• மனுதாரர் ஆதிதிராவிட பிரிவினரை சார்ந்தவராகவும், 18 - 55 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>• கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| 15.4 | <u>**தொழில் முனைவோர் திட்டங்கள்**</u><br>ஆதிதிராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட, அவர்களை தொழில் முனைவோராக உயர்த்தும் நோக்கில் பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. | | |
| 15.5 | <u>**இளைஞர்களுக் கான சுய வேலை வாய்ப்புத் திட்டம். (SEPY)**</u><br>படித்த வேலையற்ற ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்கு தெரிந்த விருப்பமான தொழிலில் ஈடுபடவும் அல்லது தொழிலினை | • குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>• மனுதாரர் ஆதிதிராவிட பிரிவினரை சார்ந்த | மாவட்ட மேலாளர், தாட்கோ |

| | | | | |
|---|---|---|---|---|
| | உருவாக்கும் எண்ணத்துடன் கூடிய ஆதிதிராவிட இளைஞர்–களுக்கான திட்டமாகும். | வராகவும், 18-35 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>• கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலை பற்றி அறிந்தவராகவோ அனுபவம் உள்ளவராகவோ இருக்க வேண்டும்.<br>• தாட்கோ, மாநில அல்லது மத்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் தகுதி சான்று பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | | |
| 15.6 | **<u>மருத்துவமனை, மருந்துக்கடை, கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலைம் அமைத்தல்</u>**<br>சிறப்புத் திட்டமான Sepy Clinic திட்டத்தின் மூலம் மருத்துவர் (MBBS, BDS, BSMS) பட்டம் பெற்று இந்தியன் மெடிக்கல் கவுன்சிலிங்ல் பதிவு செய்தவர்கள் சொந்தமாக மருத்துவமனை அமைப்பதற்கும், முடநீக்குமையம், (Physiotheraphy Centre) / மருந்தகம் அமைப்பதற்கு உரிய படிப்பு படித்து உரிய கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். கண்ணாடியகம், இரத்தப் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கு உரிய பட்ட / பட்டய படிப்பு முடித்திருக்க வேண்டும்.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத் தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend subsidy) | | | |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கும். | | |
| 15.7 | <u>**மகளிர் சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதி**</u><br>ஆதிதிராவிட பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுக்களுக்கு வறுமை ஒழிப்பு நோக்கத்தோடு உள்கடன் அளித்திட சுழல்நிதி வழங்கப் படுகிறது. இக்குழு 12 முதல் 20 உறுப்பினர்களைக் கொண்டது.<br>சுழல்நிதி ரூ.25,000/– தாட்கோ மானியமாக வழங்கப்படும். | • ஆதிதிராவிட மகளிர் மட்டுமே உள்ள குழுவாக இருக்க வேண்டும்.<br>• சுழல்நிதி பெறுவதற்கு குழு ஆரம்பித்து 6 மாதங்கள் முடித்து முதல்முறையாக தர நிர்ணயம் செய்யப் பட்டிருக்க வேண்டும்.<br>• உறுப்பினர்களுக்கான குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• பொருளாதார கடன் பெறுவதற்கு இரண்டு முறை தரம் பிரித்தல் செய்யப்பட்டிருக்க பெற்றிருக்க வேண்டும்.<br>• சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வேறு எந்த அரசு திட்டத்திலும், சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுக்கான மானியம் பெற்றிருக்க கூடாது. | |
| 15.8 | <u>**மகளிர் சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி**</u><br>ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக் குழுக்கள் முறையாக இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு கடன் பெற தகுதி பெறுகின்றார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு உரிய நேரத்தில் நியாயமான வட்டி விகிதத்தில் தேவைப்படும் அளவிற்கு கடன் வழங்குவதன் மூலம் ஆதிதிராவிட மகளிர் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகப் பட்சமாக 50% அல்லது ரூ. 2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத் தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக | | |

| | | | |
|---|---|---|---|
| | (Backend subsidy) விடுவிக்கப்படும். | | |
| 15.9 | **<u>மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை திட்டம்</u>** தாட்கோ திட்டங்கள் எதிலும் உடனடியாக பயன்பெற இயலாதவர்களுக்கு விரைவில் சுயதொழில் புரிந்து பயன்பெறும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. | • ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.<br>• குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• எந்த ஒரு அரசு திட்டத்தின் கீழும் , மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து பணப் பயன் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.<br>• கல்வி தொடர்வதற்கு கூடுதல் நிதிக்கு விண்ணப்பிப்பவர் கல்வி நிறுவனத்திடமிருந்து உண்மைத் தன்மை சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ |
| 15.10 | **<u>மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை திட்டம்</u>** இத்திட்டத்தின் கீழ் உடனடி நிவாரணம் வழங்கக் கூடிய இனமாக உதவி செய்யும் பொருட்டு ரூ.100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஆதிதிராவிட விதவைகள், மாற்றுத்திறனாளிகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்கள், நலிந்த கலைஞர்கள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகளுக்கு தேவையான திறன் வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் கல்வியினைத் தொடருவதற்கு தேவைப்படும் கூடுதல் நிதியுதவி, இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், போன்றவர்களுக்கு நிதி விடுவிக்கப்படும். | | |
| 15.11 | **<u>இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி</u>** இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுத விரும்பும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதல் நிலைத் | • இந்தியக் குடிமைப் பணி முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |

| | | | |
|---|---|---|---|
| | (Preliminary Exam) தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு (Main exam) எழுதுபவர்களுக்கு ரூ. 50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. | வேண்டும்<br>• மாநில அரசு மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும். | |
| 15.12 | <u>இளம் சட்டப் பட்டதாரி களுக்கு தொழில் துவங்குவதற்கு நிதி உதவி</u><br>இளம் சட்டப்பட்டதாரிகள் தங்கள் தொழிலை துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்களான மேஜை, நாற்காலி, அலமாரி மற்றும் சட்டப்புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.50,000/- நிதி வழங்கப்படுகிறது. | • வயது 21–45க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• தமிழ்நாடு பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் |
| 15.13 | <u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி</u> தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2013–14ம் நிதியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. | • தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்<br>• மாநில அரசு மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |
| 15.15 | <u>பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கருக்கு நிதியுதவி</u> | • வயது 25–45க்கு மிகாமல் இருக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, |

| | | | |
|---|---|---|---|
| | பட்டயக் கணக்கர்கள் / செலவுக் கணக்கர்கள் தங்கள் தொழிலைத் துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்கள் மற்றும் துறை சார்ந்த புத்தகங்கள் வாங்குவதற்கு 2013–14ம் நிதியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. | • பட்டயக் கணக்கர் / செலவு கணக்கராக தொழில் செய்வதற்கு இந்திய பட்டயக் கணக்கர் நிறுவனம் / செலவு கணக்கர் நிறுவனத்தில் உறுப்பினராக பதிவு செய்திருக்க வேண்டும். | தலைமை அலுவலகம், சென்னை |
| 15.16 | <u>சமூக நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு நிதியுதவி</u><br>• மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 8202 ஆதிதிராவிடர், 204 அருந்ததியர்களுக்கு ஆக மொத்தம் 8406 மகளிர் பயன்பெறும் வகையில் உயர்தர நவீன தையல் இயந்திரம் வாங்கிட திட்டத்தொகையில் 70% ரூ.8.83 கோடி தாட்கோ மூலதனத்தில் இருந்து 4% வட்டியில் விளிம்புக் கடனாகவும், மீதமுள்ள 30% ரூ.3.77 கோடி தாட்கோ மூலம் மானியமாகவும் வழங்கப்படும். | | மாவட்ட சமூக நல அலுவலர் |
| 15.17 | <u>திறன் மேம்பாட்டு பயிற்சிகள்</u><br>• சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்து ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தரப்படும்.<br>• மைய அரசு நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், கணினி பயிற்சிகள், தகவல் தொழில் நுட்பம் மற்றும் அவை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும். | | தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |
| **16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டம். தாட்கோ (பழங்குடியினர்)** | | | |
| 16.1 | **நிலம் மேம்பாட்டுத்திட்டம்**<br>இத்திட்டம் பழங்குடியின மக்களின் நிலங்களை விவசாயத்திற்கு தேவையான நில மேம்பாட்டு ஆதாரங்களை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.3.75 இலட்சம் தொகை மானியமாக | 1. விண்ணப்பதாரர் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. 18–55 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>3. விண்ணப்பதாரர் விவசாயத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.<br>4. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இது வரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர் தாட்கோ. |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படும். இம்மானியம் பின் விடுவிப்புமானியமாக (Backend subsidy) விடுவிக்கப்படும். | | |
| 16.2 | **தொழில் முனைவோர் திட்டம்** பழங்குடியின மக்கள் தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட அவர்களை தொழில் முனைவோராக உயர்த்தும் நோக்கில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. அதிக பட்சமாக 50% அல்லது ரூ.3.75 இலட்சம் தொகை மானியமாக வழங்கப்படும். இம்மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend subsidy) விடுவிக்கப்படும். | 1. விண்ணப்பதாரர் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவராக கருக்க வேண்டும்.<br>2. 18–55 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>3. கடன் மற்றும் மான்யம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.<br>4. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இது வரை மானியம் எதுவும் பெற்றிருக்கக்கூடாது. | மாவட்ட மேலாளர் தாட்கோ |
| 16.3 | **இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம். அ) பயணியர் வாகனம்/ஈப்பு ஆ) கனரக வாகனம்.** பழங்குடியின இளைஞர்களுக்கு பயணியர் வாகனம் ஈப்பு வாங்கிட திட்டத் தொகையில் 50% அதிகபட்சம் ரூ.4.00 இலட்சம் மானியம் மற்றும் கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50% அதிக பட்சம் ரூ.5.50 இலட்சம் பின் விடுவிப்பு மானியமாக வழங்கப்படும். | 1. விண்ணப்பதாரர் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. 18–35 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>4. விண்ணப்பதாரர் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக்கூடாது. | மாவட்ட மேலாளர் தாட்கோ |
| 16.4 | **மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான அ) சுழல்நிதி ஆ) பொருளாதார நிதி** பழங்குடியின மகளிர் தங்களுக்குள் உள்ள தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒரு குழுவாக இணைந்து தெரிந்த தொழில் தொடங்கி வருமானம் | 1. பழங்குடியின மகளிர் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.<br>2. குழு உறுப்பினர்கள் 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.<br>3. சுழல்நிதி பெற ஆறு மாதம் முடிந்து தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>4. பொருளாதார கடனுக்கு குழு ஆரம்பித்து ஒரு வருடம் முடித்து தரம் செய்திருக்க வேண்டும்.<br>5. குழுவில் உள்ள ஒவ்வொரு | மாவட்ட மேலாளர் தாட்கோ. |

| | | | |
|---|---|---|---|
| | ஈட்டி, சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இக்குழு 12 முதல் 20 உறுப்பினர்களைக் கொண்டது. சுழல் நிதிக்கு ரூ.25000 தாட்கோ மானியமாக வழங்கப்படும் பொருளாதார நிதிக்கு 50% அல்லது 3.75 இலட்சம் இவற்றில் குறைந்த தொகை எதுவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இம்மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend subsidy) விடுவிக்கப்படும். | உறுப்பினருக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>6. ஊக்குநர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சம் வரை இருக்கலாம். | |
| **17. வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்** | | | |
| 17.1 | **இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்**<br>இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. கிராமப்புறத்தில் 3 சென்டும், நகராட்சி பகுதியில் 1½ சென்டும், மாநகராட்சி பகுதியில் 1 சென்டும் வழங்கப்படுகிறது | • வீட்டுமனை சொந்தமாக இருக்கக் கூடாது.<br>• ஆண்டு வருமான வரம்பு கிராம பகுதியில் ரூ.40,000/– நகரப் பகுதிகளில் ரூ.60,000/–<br>• ஆதிதிராவிடர் / பழங்குடியினராக இருக்கவேண்டும் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) |
| 17.2 | **வீடுகள் கட்டித்தரும் திட்டம்**<br>"இந்திரா நினைவு குடியிருப்பு" திட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரப் படுகின்றன. | • வீடு இல்லாதவர் களுக்கு மட்டும்<br>• மனைப்பட்டா வைத்து இருக்க வேண்டும்<br>• பழங்குடியினருக்கு மட்டும் | சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தலைவர்/ ஊராட்சி ஒன்றிய அலுவலர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. |

| | | | |
|---|---|---|---|
| 17.3 | **குடிநீர் வசதி**<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் இடங்களில் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பு களுக்கு குடிநீர் வசதிகள் செய்து தருதல் | • குடிநீர் வசதி இல்லாமை | 1) கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்<br>2) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்<br>3) ஊராட்சி ஒன்றிய அலுவலர் |
| 17.4 | **மயானம்**<br>மயானம் மற்றும் மயானத்திற்கு செல்லும் பாதை வசதிகள் செய்து தருதல். | • ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்பு களுக்கு மயானம் இல்லாமை<br>• மயானம் இருந்தால் அதற்கு பொது பாதை வசதி இல்லாதது | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| 17.5 | **இணைப்புச் சாலை**<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்து தருதல் | • குடியிருப்பு களுக்குச் செல்ல இணைப்புச் சாலை இல்லாமை | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி ஒன்றிய அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியினர் நல அலுவலர் |
| 17.6 | **சமுதாய நலக்கூடங்கள்**<br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சமுதாய நலக்கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன | • சமுதாய நலக்கூடங்கள் இல்லாத ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகள் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ. |
| 17.7 | **ஈமச்சடங்குக்கு உதவி**<br>ஏழ்மை நிலையில் உள்ள ஆதிதிராவிடர் / பழங் குடியினர் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் ஈமச்சடங்கிற்கு ரூ.2500/– மானியமாக அளிக்கப் படுகின்றது | • இறந்தவர்களின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு கிராமப்பகுதி களில் ரூ.40000/– நகரப் பகுதிகளில் ரூ.60000/–க்குள் இருக்கவேண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருக்க வேண்டும். | அலுவலர், ஊராட்சி ஒன்றிய செயல் அலுவலர், பேரூராட்சி இயக்குநர், நகராட்சி / மாநகராட்சி/மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

**18. தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்**

| | | | |
|---|---|---|---|
| 18.1 | **புதிரை வண்ணார் நல வாரியம்**<br><br>ஆதி திராவிடர் இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணாரின மக்களது பொருளாதாரம் கல்வியை மேம்படுத்துதல் | • புதிரை வண்ணார் சாதியினர்<br>• சலவைத் தொழில் செய்ய வேண்டும்.<br>• 18 வயது முதல் 60 வயது உடையவராக இருத்தல் வேண்டும். | சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| **19. கொத்தடிமை ஒழிப்புத்திட்டம்** | | | |
| **19.1** | **கொத்தடிமை ஒழிப்பு**<br><br>கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ.1000/– உடனடி நிவாரணத் தொகையாகவும், பின்னர் அவர்களது சுய தொழில் தொடங்க ரூ.19,000/– மறுவாழ்வு நிவாரண நிதியாகவும் 01.04.2000 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய மாநில அரசு களின் 50:50 பங்குத் தொகையில்<br><br>செயல்படுத்தப் படுகின்றன. கொத்தடிமைமுறை ஒழிப்புத்திட்டம். கொத்தடிமையாக உள்ள எல்லா இனத்தவரும், தமிழகத்திலும், இதர மாநிலத்திலும் கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்டவர்கள். | • சாதி, மத பேதமில்லை<br>• விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் அனைவரும் | மாவட்ட ஆட்சியர் / சார்ஆட்சியர்/ கோட்டாட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |
| **20. பழங்குடியினர் நலத்துறை திட்டங்கள்** | | | |
| 20.1 | **தோட்டக்கலை மேம்பாடு**<br>ரூ.1000/- பெறுமானமுள்ள மரக்கன்றுகள், விதைகள், உரம் இலவசமாக வழங்கப் படுகின்றன | பழங்குடியினர் ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை |

| | | | |
|---|---|---|---|
| 20.2 | **பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்டம்** மல்பரிதோட்டம் ஏற்படுத்தவும் பட்டுப்புழு வளர்க்கவும் முழு மான்யம் அளிக்கப் படுகிறது. | பழங்குடியினர் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர் பட்டுவளர்ச்சித்துறை |
| 20.3 | **சிறிய நீர்ப்பாசனத் திட்டம்** பழங்குடியினர் அதிகம் நிலம் வைத்திருக்கும் பகுதிகளில் சிறிய நீர்த்தேக்க அணை போன்றவை ஏற்படுத்தப்படுகின்றன. | பயன்பெறுவோரில் 50% மேல் பழங்குடியினராக இருக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் செயற்பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு, பொதுப் பணித்துறை. |
| 20.4 | **கால்நடை பராமரிப்பு** ஆடுகள், கறவை மாடுகள், வாங்கி வளர்க்க முழு மானியம் வழங்கப்படும். கால்நடை களுக்கு மருத்துவ வசதி, கருவுருத்தல் போன்றவைகளும் செய்யப்படுகின்றது. | பழங்குடியினர் | மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை ஆய்வாளர் |
| 20.5 | **விவசாய நில மேம்பாடு** மலைச்சரிவில் உள்ள நிலத்தை மழை நீர் அடித்துச் செல்லாமல் தடுத்து விவசாயம் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தல் இவை முழுவதும் இலவசமாக செய்து தரப்படுகின்றது. | நிலமுடைய பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை. |
| 20.6 | **தேனி வளர்ப்பு** தேன் சேகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க 10 தேன் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. | மலை, காடு பகுதிகளில் வாழும் பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி / துணை இயக்குநர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியம் |
| 20.7 | **வனவளப் பாதுகாப்பு** வனவளத்தை அதிகரிக்க | வனப்பகுதியில் வாழும் பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| | செடிகள் வழங்குதல், அந்த செடிகளைப் பராமரிக்க ஊக்கத்தொகை வழங்குதல் | | |
| 20.8 | **பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள்** பழங்குடியினருக்கு வட்டியில்லாக்கடன் வழங்க, அவர்கள் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்க, அரிசி, உப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருள்களை நியாய விலையில் வழங்க, விவசாயத்திற்குத் தேவையான இடு பொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்ய, பொருளாதாரத் திட்டங்களுக்கு கடன் போன்றவை பெறும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (LAMP) மூலம் வழங்குதல். | பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர்/ தனி அலுவலர், சம்பந்தப்பட்ட பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் |
| 20.9 | **தெருவிளக்கு அமைத்தல்** பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு தெருவிளக்கு அமைத்தல் | தெருவிளக்கு இல்லாத குடியிருப்பு | கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் ஊராட்சி ஒன்றிய அலுவலர். |
| 20.10 | **இணைப்புச் சாலைகள் அமைத்தல்** பழங்குடியினர் குடியிருப்புகளை முக்கிய கிராமத்துடன் அல்லது சமவெளியுடன் இணைத்தல் | தற்பொழுது சாலை வசதி இல்லாத கிராமம் | அலுவலர், ஊராட்சி ஒன்றிய கண்காணிப்பு பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைத்துறை / மாவட்ட ஆட்சியர். |
| 20.11 | **இலவசமாக வீடுகள் கட்டித்தருதல்** மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டித்தருதல் | வீட்டுமனை பட்டா உள்ள பழங்குடியினர் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / ஊராட்சி ஒன்றிய அலுவலர் / பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் |
| 20.12 | **வேலைவாய்ப்பு ஆலோசனைகள்** பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்குரிய | பழங்குடியின இளைஞர்கள் | சிறப்பு வேலை வாய்ப்புக்கான ஆலோசனை மையத்திலுள்ள வேலை வாய்ப்பு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | உதவிகள், ஆலோசனைகள் நல்க ஒரு தொழில் நெறி வழிகாட்டும் மையம் உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது. | | பயிற்சித்துறை அலுவலர், உதகமண்டலம். |
| 20.13 | **வேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல்** போதிய கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல். | கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்கள் | பயிற்சிக்கான வழிகாட்டிக்கு தொடர்புடைய மாவட்ட வேலை வாய்ப்பு மையங்கள் |
| 20.14 | **பெண்கள் முன்னேற்றத்திற்கு பயிற்சி அளித்தல்** பழங்குடியின பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி, மூங்கில் கூடைமுடைதல் போன்ற பயிற்சி அளித்தல். | பழங்குடியின பெண்கள் | சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர். |
| 20.15 | **மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்** நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தருதல், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, உண்டி உறைவிடப் பள்ளிக்கு குடிநீர் வசதி, கூடுதல் கட்டிட வசதி, சமுதாயக்கூடம், கணினிகள், வாகன உரிமம், பாதை வசதி அளிப்பது முதலியவை | பழங்குடியினர்கள் | திட்ட அலுவலர் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நீலகிரி மாவட்டம். |

| | | | |
|---|---|---|---|
| 20.16 | **மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**<br>இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர்களுக்கு 8 மாவட்டங்களில் பின்வரும் பணிகள் செய்து தரப்படுகிறது. சுற்றுச்சுவர், தடுப்புச்சுவர், வகுப்பறைகள், சூரிய ஒளி நீர் கொதிப்பான் மற்றும் சமையல் கூடம் ஆகியன பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு கட்டித்தருதல், பாதை வசதி, குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் ஆகியன பழங்குடியின குடியிருப்புகளுக்கு செய்து தரப்படுகிறது. | பழங்குடியினர்கள் | மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்<br>1. கன்னியாகுமரி<br>2. திருநெல்வேலி<br>3. விருதுநகர்<br>4. மதுரை<br>5.தேனி<br>6.திண்டுக்கல்<br>7. கோயம்புத்துார்<br>8. திருப்பூர் |
| **21. தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்** | | | |
| | **தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்**<br>பழங்குடியின ஒட்டு மொத்த சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. | பழங்குடியினர் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.<br><br>18 வயது முதல் 60 வயது உடையவராக இருத்தல் வேண்டும். | தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் |

## அனைத்து வாரியங்களின் கீழ் அளிக்கப்படும் உதவிகளின் விபரம்:

| வ.எண். | | திட்ட உதவிகள் | உதவித்தொகைரூ. |
|---|---|---|---|
| 1 | | **விபத்துக்காப்பீட்டுத்திட்டம்** | |
| | | (அ) விபத்து இறப்பு | 1,00,000/- |
| | | (ஆ) விபத்து ஊனம் | 10,000/-முதல் 1,00,000 வரை |
| 2 | | இயற்கையாக மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு உதவி | 15,000/– |
| 3 | | ஈமச்சடங்கு உதவி | 2,000/– |
| 4 | | **கல்வி உதவித்தொகை** | |
| | அ | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | இ | 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஈ | 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/- |
| | உ | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | ஊ | முறையான பட்டபடிப்பு | 1,500/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தல் | 1,750/- ஆண்டுக்கு |
| | எ | முறையான பட்டமேற்படிப்பு | 2,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 3,000/- ஆண்டுக்கு |
| | ஏ | தொழில் நுட்பப்பட்டப்படிப்பு | 2,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/- ஆண்டுக்கு |
| | ஐ | தொழில் நுட்பப்பட்ட மேற்படிப்பு | 4,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/- ஆண்டுக்கு |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/- ஆண்டுக்கு |
| | | விடுதியில் தங்கிப்படித்தால் | 1,200/- ஆண்டுக்கு |
| 5 | | **திருமண உதவி** | 2,000/- |
| 6 | | **மகப்பேறு உதவி** | |
| | அ | மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/– வீதம் | 6,000/- |
| | ஆ | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000/- |
| 7 | | பழைய கண்கண்ணாடியை மாற்றுவதற்கும் / புதிய கண்கண்ணாடி வாங்கிட உதவி | 500/–க்கு மிகாமல் |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் | 1000/– பிரதி மாதம் |

**ந. சுப்ரமணியன்**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்**